# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

18-12-66



# கேள்வி--பதில்!

1. மலேசியாவில் மலாய் மொழிதான் தேசிய மொழியா?

மலாய் மொழியை தேசிய மொழியாக 1967 செப்டம்பர் முதல் ஏற்கவேண்டுமென மலேசிய அரசு கூறிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் இந்தி திணிக்கப்படுவதைப்போல, மலேசியாவில் திணிப்பு எதுவும் காட்டப்படவில்லை. எனினும், ஒருமொழி ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அரசுத் துறையில் சிலரும் வெளியாரும்கூட இதனை வன்மையாகக் கண்டிக்கிறார்கள். பல இன மக்களைக் கொண்டுள்ள அங்கு, அடுத்துள்ள சிங்கப்பூரில் பிற மொழிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சம மதிப்புபோலவே, மலேசியாவிலும் தமிழ் முதலான பிற மொழிகளுக்கும் உரிய மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்ற உரிமைக் குரல் உரக்க ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது! இதழ்கள்கூட கண்டிக்கின்றனவென்றும் தெரிகிறது!

2. தேர்தலுக்கு முன்னர் ஆட்சியிலிருப்போர் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் கோருவது எதனால் என்று விளக்குவீர்களா?

நாட்டு மக்களுக்கு, ஆள்வோரினால் கிடைக்கின்ற நல்ல பலன்களையும், சலுகைகளையும், அவை கிடைக்கக்கூடாது என்று யாரும் கூறவில்லை. ஆண்டாண்டுக் காலமாக அழுதுப புலம்ப விட்டுவிட்டு, அந்திமக் காலததில் வந்து அக்கறை காட்டினால், ஆஸ்திகளை அபகரித்துக்கொள்ள நினைக்கிறான் என்பதுதானே பொருள்? இந்தியக் குடிமக்களுள் 24-கோடிப் பேருக்கு வாக்குரிமை மட்டும்தான் ஆஸ்தியாக இருக்கிறது. குறைந்த பட்சத் தேவையாக வயிற்றுக்கு சோறுகூட, தம் ஆட்சிக் காலத்திலே கொடுக்காதவர்கள், தேர்தலுக்கு நாள் குறிப்பிட்டுக்கூறிவிட்டு வெள்ளை அரிசி கொடுக்கிறோம் என்று கூறினால் என்ன பொருள்? ஓரிரு மாதங்களுக்கு வெள்ளை அரிசியைப் பெற்றுக்கொள்வோர், பல்லாண்டுக் காலம் பட்டினி கிடந்ததை மறந்துவிட வேண்டும் என்று ஆட்சியினர் கருதுகின்றனர் என்றல்லவா தெரிகிறது! பாங்கி ஊழியர்கள் எத்தனை ஆண்டுகளாக ஊதிய உயர்வு கேட்டுக் கொண்டிருந்தார்கள்? எத்தனை முறை தூது சென்றார்கள்! அப்போதெல்லாம் இல்லாத பொருளாதார முன்னேற்றம், தேர்தல் வருகிறது என்றவுடன் ஏற்பட்டு விட்டதா? சர்சார்ஜ் விலக்களித்தார்களே, சர்சார்ஜ் விதிப்புக் கூடாது என்று கழகம் கூறவில்லையா? தாழ்த்தப்பட்ட குடிமக்களுக்குக் கடன் உதவி டளிக்க நினைப்பது எதனால்'—கடந்த 1[illegible] ஆண்டுக் காலத்தில் இந்த எ[illegible]ணம் ஆட்சியிலிருக்கும் எந்த ஒருவருக்கும் எழவில்லையா? எல்லோருக்கும் வீட்டுமனை தர இப்போது மட்டும் எப்படி முடிகிறது. அரசு ஊழியர்க்கு ஊதிய உயர்வு தர, இப்போது மட்டும் எங்கிருந்து பணம் கிடைத்தது—நியாய உள்ளம் படைத்தவர்களாக இருந்தால், ஒன்றின் அடிப்படையில், ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டவுடன், கோரிக்கையின் தன்மையினை அலசி ஆராய்ந்து அளிக்கப்படவேண்டிய உதவிகளை அவ்வப்போது அளித்திருக்க வேண்டும். பதவி பறிக்கப்பட்டுவிடும் என்று நிதர்ச்சனமாகத் தெரியும்போது, தித்திப்புக்கள் கொடுப்பது என்பது கண்டிக்கத்தக்கது! —இப்படி அதிகாரச்சீரழிவு எதுவும் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் — பதவி விலகல் தேவையென எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

3. அமெரிக்காவில் கம்யூனிஸ்டுக் கட்சி இருக்கிறதா? இயங்குகிறதா?

ஒரு அந்நிய அரசின் அதிகாரம் பெற்ற ஏஜெண்ட் என்று பதிவு செய்துகொண்ட பின்னர், கம்யூனிஸ்டுக்கட்சி இயங்க முடியும் என்று தெரிகிறது. தேர்தலில் நிற்கவும் உரிமையுண்டாம்! பலத்தக் கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் இயங்குமெனத் தெரிகிறது!

4. வாரம் ஒருநாள் அரிசிப் பங்கீட்டில் வெட்டு வரும் என்று உணவமைச்சர் கூறுகிறாரே, முறையா?

உணவமைச்சர் கூறுவதற்கு நான் என்ன செய்ய முடியும்? ரஷ்யாவும் கோதுமை உதவி செய்ய முடியாது என்றுகிவிட்டது. இப்போதே வாரத்தில் இரண்டுவேளைப் பட்டினி! இனிமேல் ஒரு முழுநாள் பட்டினி! மீண்டும் காங்கிரசே ஆட்சிக்கு வந்தால், வாரத்துக்கு ஒருவேளை அல்லது ஒரு நாள்தான் சாப்பிட வேண்டிய நிலைமை வந்தாலும் வரும்! ஓட்டுப்போடும் வரையிலாவது நாம் உயிர் வாழவேண்டும் என்று நினையாமல், ஓட்டுப் போட்ட பின்னரும் உயிர் நிலைக்க வேண்டுமென்று நினையுங்கள்!

5. குறைகள் கூறப்படுவதற்கும் ஒரு எல்லை வேண்டாமா?

கொடுமைகள் படுத்தப்படுவதற்கும் ஒரு வரம்பு தேவையில்லையா!

6. எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைப்பது ஜனநாயகமல்ல என்று தமிழக கவர்னர் உஜ்ஜல் சிங் கூறுவது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

அண்மையில்தானே கவர்னர்கள் மாநாடு நடைபெற்றது! தேர்தல் ஒழுங்காக நடைபெறும்படி கவர்னர்கள்தான் கவனிக்க வேண்டும் என்றல்லவா கோரப்பட்டுள்ளது! ஒழுங்காக நடைபெறும்படி கவனித்தல் என்பதற்கு என்னபொருள் என்று விளக்கமளித்திருக்கிறார் அவர். அவ்வளவுதான்! ஜனநாயகம் என்ற தத்துவத்தை, அவர் புரிந்துவைத்துக் கொண்டுள்ள முறை அது. அப்படிப் புரிந்து கொண்டுள்ளவர்தான் தமிழகத் தேர்தலையும் கவனிக்கப்போகிறார்! என்பதையும் நீங்கள் புரிந்துகொண்டு — எச்சரிக்கையாக இருங்கள்!

7. உணவு நெருக்கடி காரணமாக இந்தியாவின் மதிப்பு உலக நாடுகளில் குறைந்திருக்கிறதா என்ன?

யார் சொன்னார்கள் அப்படி? இந்திய ரூபாயின் மதிப்பைப் போல் அல்லவா ஆகி இருக்கிறது!

o

காஞ்சி

மலர் 3 18-12-66 இதழ் 21

# கூட்டுச் சதி?

நாட்டு மக்கள் கடந்த 19 ஆண்டுக் காலமாக காங்கிரசாரின் ஆளுந்திறமையால், புரிந்துகொள்ளப் படாமலிருந்த அரசியலையும் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர்! இதனால், அண்மையில் வரவிருக் கின்ற பொதுத் தேர்தல்பற்றிய அச்சம், காங்கிரசாரை ஆட்டிப்படைக்கத் தொடங்கியிருக்கிறது என்பதற் கான பல சான்றுகள் நிதர்சனமாகத் தெரியத் தொடங்கியுள்ளன.

கரணவித்தை புரிவோர் தடுக்கி விழுந்தால், அதுவுமோரு தந்திரம் என்று கூறித் தப்புவார்கள். வீரமிக்க பேச்சுப் பேசி, தம் அச்சத்தை மறைக்கப் பார்ப்பது அரசியல் கூத்தில் சாதாரண அம்சமாகும்! மனம் உடைந்து போகக்கூடாது என்பதற்காக, தோல்வியை வெற்றியின் முதல்படி என்றுகூறி ஆறுதலுரைப்பதும் இயற்கைதான்!

ஆனால், காங்கிரஸ் கட்டிடம் கலகைவிட்டது என்று அல்ல—கலனக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டியவர்கள் அறிந்துகொண்ட காரணத் தால், காங்கிரஸ் அமைச்சர்களிலேயே பலர், தங்கள் வீழ்ச்சிக் கட்டத்தை, வீரம் கலந்து பேசத் தொடங்கி விட்டார்கள்.

இரு திங்களுக்கு முன்னர், அமைச்சர் பாட்டில், காங்கிரசை வன்முறை மூலம் மாற்ற முடியாது; வாக்குச் சீட்டு மூலம் மாற்ற முயலுங்கள் என்றார்!

வன்முறைச் செயல்களை வளர்த்துவிட்டவர்களே குழுமியுள்ள கூடமாகிவிட்டது காங்கிரஸ்—அதனால் அது அதன்மூலம் வெற்றிகாண முடியாது, வாக்குச் சீட்டு மூலமே முடியும் என்று ஒப்புக்கொள்ளத்தக்க விதத்தில் பாட்டில் கூறினர்! சில நாட்களுக்குமுன் அமைச்சர் சஞ்சீவரெட்டியும்,

> "பல வருடங்களாக ஆட்சி புரிந்து வரும் காங்கிரஸ், கொஞ்சகாலம் எதிர்க் கட்சியாக இருந்தால்கூட நல்லது"

என்று கூறியிருக்கிறார்.

ஆக, தம் அழிவை மனக்கண்ணால் காணத் தொடங்கிவிட்டவர்கள், ஏற்படவிருக்கின்ற முடிவை விருப்பங்களாக்கிப் படைக்கின்றனர். ஆனால் ஆசை களோ, ஆருடங்களோ எதன் காரணமாக எழு கின்றன? என்றெண்ணுகிறபோது சிரிக்காமலிருக்க முடியவில்லை.

ஓட்டுச் சீட்டுகளின் மூலம் காங்கிரசை மாற்றுங் கள் என்று பாட்டில் கூறுவதன் உட்பொருள், அப்படி மாற்றத்தான் போகிறார்கள் என்பதை அவர் உணர்கிறார் என்றே பொருள்கொள்ள முடியும். இதே பொருளை அமைச்சர் சஞ்சீவ ரெட்டியின் பேச் சுக்கும் பொருத்திக்கொள்ளலாம்.

இந்த நிலைமை, தமிழகத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவின் பல மாநிலங்களிலும்கூட எதிரொலிக் கும் என்றும் யூகிக்கப்படுகிறது. மத்திய அரசுகூட போதிய வலுவுடன் அமைக்கப்படுமா? என்ற ஐயப் பாடும், இந்தியாவுக்குள்ளே மட்டுமல்ல, ஆசிய, ஆப் பிரிக்க நாடுகளிலேயேகூட மிக உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றன என்ற விவரத்தை இந்திய இதழ்கள் எடுத்துக்காட்டிக்கொண்டும் உள்ளன.

அமெரிக்காவின் உணவு முடக்கத்துக்கும், இரஷ் யாவின் உணவு கைவிரிப்புக்கும், பிறபல நாடுகளின் மூலதன உதவிச் சிக்கல்களுக்கும் இந்த நிலைமை பொருத்திக் காட்டப்படுகிறது — அரசியல் பார்வை யாளர்களால்!

இந்தியாவக்கு வெளியே, இந்தியாவைப் பற்றி இத்தகைய எண்ணங்கள் எழும்படியான நிலைமையை இன்றைய ஆளவந்தார்களே ஏற்படுத்திவிட்டார்கள் என்பதை, எப்படி யெப்படி மூடி மறைத்தாலும்— உண்மைகள் பொத்துக்கொண்டு வரத்தான் செய் கின்றன.

இந்தியாவில் அமெரிக்கத் தூதராக இருக்கும் செஸ்டர் பௌல்ஸ், தான் தொடர்ந்து இப்பதவியி லிருக்க இயலாதிருக்கும் நிலைமையைச் சுட்டிக் காட்டும் ஒரு அறிக்கையில், இந்தியாவின் தற்போதைய அரசி யலை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டி, மனம் வெதும்பி, பதவித் துறக்க விருப்பதை இலை மறை, காய் மறைவாக எடுத்துக் காட்டி இருப்பதும், நாட் டின் நிலைமையில் — இனியும் காங்கிரஸ் நீடிப்பது அபாயகரமானது என்பதற்கு உணர்ந்து கொள்ளத் தக்க சரியான ஆதாரங்களாகும்.

மொத்தத்தில் காங்கிரசின் தலையிடத்திலிருக்கும் பலரே, காங்கிரசின் அழிவையும், சரிவையும் சரியாகக் கணக்கிட்டு யூகங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கிற இந்த வேளையில்—

தமிழக கவர்னர் உஜ்ஜல் சிங், தமிழக அரசியலில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தி—குட்டை குழப்பிவிட் டிருக்கிறார், கடந்த கிழமை!

கவர்னர் பதவி என்பது கட்சி—அரசியலுக்கு அப்பாற்பட்டதாகும்! வெறும் ரப்பர் - ஸ்டாம்புகள்! என்று வருணிக்கப்பட்டதேபோல், எட்டி நின்று எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டியதுதான் கவர் னர்களின் பணி! ஆட்சியிலிருப்பது எந்தக் கட்சியாயி னும், அதன் பணிகளையும் நடைமுறைகளையும்—தூர நின்று கவனித்து, தடம் புரளும்போது எச்சரித்து சரியான வழிகாட்ட வேண்டியது ஒன்றுதான் அரசி யல் சாசனப்படி இடப்பட்டுள்ள உத்திரவு.

அரசியல் மாச்சர்யங்களில் தலையிட்டு, கருத்துக் கள் கூறுவதென்பது — கவர்னர்களது உள்ளுணர்வு களுக்குப் பொருந்துவதா யிருந்தாலும்—வெளியிடக் கூடாதனவாகும்! ஏனென்றால் அவர்கள் கவர்னர்கள்! மக்களுக்கு மட்டுமல்ல, சட்ட அவைகளுக்கும், அமைச் சர் அவைகளுக்கும்கூட—அவர்கள் கவர்னர்கள்!!

விருப்பு—வெறுப்பற்ற தன்மை கொண்டவர்க ளாக அவர்கள் இயங்கவேண்டும்! அதனை விடுத்து விட்டு, அரசியல் அரங்கில் வந்து ஆடத் தொடங்கும் போது—

**எதிர்க் கட்சிகள் கூட்டுச் சேருவது ஜன நாயகம் அல்ல; கூட்டணி சேர்ந்து ஆட்சியைக்**

கைப்பற்றினாலும், அந்த மந்திரி சபை நிலைத்திருக்காது.''

என்பன போன்ற கருத்துரைகளை வழங்கக்கூடாது

கூட்டுச்சேருவது ஜனநாயக மரபு அல்லவா, என்பது வேறு வழக்கு—சென்னை கவர்னரின் பேச்சுப்படியே, ஜனநாயகம் அல்லவென்று வாதத்துக்கு மட்டுமே ஒப்புக்கொண்டாலும்கூட, இக்கருத்தை அவர் தெரிவிக்கவே கூடாது. ஏனென்றால் அவர் பொது விதரக இருக்கவேண்டியவர். இதனையும் மீறி,

ஆட்சியைக் கைப்பற்றினாலும் அந்த மந்திரி சபை நிலைத்திருக்காது

என்று தீர்ப்பும் வழங்கி இருக்கிறார் என்கிற போது—ஜனநாயக மரபு என்பது பற்றித் தமிழக கவர்னர் எந்த அளவு உணர்ந்திருக்கிறார் என்பது நமக்கு ஐயமாகிறது!

இதே வேளையில், அண்மையில் தமது சொந்த தொகுதியில் மேற்கொண்ட ஒரு பயணத்தின்போது—

''காங்கிரஸ் அல்லாத எந்த அரசையும் ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டோம்; அனுமதிக்கவும் முடியாது''

என்று பேசினார் இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார்!

எதிர்க்கட்சி அரசை ஏற்றுக்கொள்ளும் பெரிய மனது, பாவம் தலைமை அமைச்சருக்கு இல்லாதிருக்கலாம் என்ற நினைப்பில், விவகாரம் விரிவுபடுத்தப் படாத நிலையில், மாநில கவர்னர் 'எதிர்க்கட்சி அரசு நிலைக்காது' என்று எந்த அடிப்படையில், தம் கடமையையும், சுய கட்டுப்பாட்டையும் மீறி அறிவிக்கிறார்? என்ற திகைப்பு மேலிடுகிறது!

ஆனால், கூட்டணிபற்றி அவரது கருத்து வெளிவருகிற அதே வேளையில் அகில இந்தியா புகழ் காமராசர்,

கூட்டணியால் நாட்டுக்கு நல்லது ஏற்படாது; காங்கிரஸை எதிர்த்தாலும் ஆட்சிக்கு வரமுடியாது.

என்று பேசியிருக்கிறார்!

கூட்டணி அமைப்பு தமிழகத்தைப் பொறுத்த மட்டில், முடிவாகிவிட்டதொன்று! பிற வெளி மாநிலங்களில் இதற்கென தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வேளையில்தான், ஒருவர்பின் ஒருவராக, கூட்டணிபற்றி அங்கலாய்த்துக்கொள்கிறார்கள்!

பேசக்கூடாதவர்கள் பேசுகிறார்கள்! ஜனநாயகம் அதனையும் அனுமதிக்கிறது. தமிழிலக்கணத்தில் இடக்கரடக்கல் என்றொரு விதியுண்டு. அதேபோல் காங்கிரசாரே, காங்கிரஸ் எதிர்க்கட்சியாயிருந்தால் நல்லது என்று கூறத் தலைப்பட்டுவிட்டார்கள்!

சிலர் அறிவுரை கூறுகிறார்கள்! சிலர் அங்கலாய்த்துக்கொள்கின்றனர்! சிலர் அதட்டியும், மிரட்டியும் பார்க்கின்றனர்!

ஆனாலும் 1967 பொதுத் தேர்தலைப் பொறுத்த மட்டில் காமராசரது அதட்டலுக்கும், தலைமையமைச்சரது மிரட்டலுக்கும், மதிப்புக்குரிய கவர்னர் அவர்களது வேண்டப்படாத பேச்சுக்களும், இதனிடையே காணப்படுகின்ற கருத்தொற்றுமையால் இடையே ஏதேனும் கூட்டுச்சதி இருக்கக்கூடுமோ? என்று ஐயப்பாடு எழத்தான் செய்கிறது' என்றாலும்—

தமிழக மக்கள் நல்ல தீர்ப்பு நல்கத்தான் போகிறார்கள்! காணத்தான் போகிறோம்'


# காஞ்சி
## பொங்கல் மலர்

(1967)

தமிழ்தன்னை அமிழ்தென்று சொல்!
அந்தத் தமிழ்தாங்கி மலர்வதே ''காஞ்சி'' எனக் கொள்!


தலைவர்கள் பலரது
கதைகள்
கட்டுரைகள்
கவிதைகள்
கார்டூன்கள்
இவற்றோடு

அண்ணாவின்

நீண்ட நாடகமும்

மற்றும் இரு கருத்துரையும் மிளிர

மலர் தயாராகிறது!



# தம்பி

## என்றால் முடிந்ததைச் செய்கிறேன்

நாடெங்கும், வீடெல்லாம் தேர்தல் பற்றிய பேச்சொலி மேலோங்கி இருந்திடக் காண்கின்றாய். சூடும் சுவையும் நிறைந்த பேச்சு! காரணம் கணக்கு இணைந்த பேச்சு! முன்னாள் இந்நாள் நிலைமை விளக்கம் காட்டும் பேச்சு! அங்கு முன்போல் இல்லை! இங்கு முன்பு இருந்ததைவிட ஆர்வம் அதிகம் என்பன போன்ற பேச்சுகள் எங்கும் ஒலித்துக் கொண்டுள்ளன. உமது கருத்து என்ன? எனக்கு நிலைமை நன்கு புரிந்ததால்தான் இவ்விதம் கூறுகிறேன். எவரெவரிடம் பேசவேண்டுமோ அவர்களிடமெல்லாம் பேசிப் பார்த்த பிறகே இந்த முடிவுக்கு வந்துள்ளேன். இன்னின்னார் நம் பக்கம் நிற்பார்கள் என்ற உறுதியைப் பெற்ற பிறகே கூறுகிறேன்! என்ற இவ்விதமான பேச்சு, பலப்பல! பொதுவாக பொதுத்தேர்தல் பற்றிய பேச்சு பலமாகிவிட்டது.


இது தவறு, தேவையற்ற பரபரப்பு, பிற அலுவல்களைக் கெடுத்திடும் காரியம், நாட்டின் பொதுப் பிரச்சினைகளைக் கவனிக்கும் போக்கைப் பாதிக்கும் நிலைமை இது; ஆகவே இது தீது என்று கூறுவார் உளர்.

ஆனால் மக்களாட்சி முறை பொருளும் பயனும் தரத்தக்கதாக இருந்திட வேண்டுமானால், பொதுத் தேர்தல்பற்றி, நாட்டு மக்கள் இவ்விதமான ஆர்வம் காட்டுவதும், காரணம் கண்டறிவதும், கணக்குப்போட்டிடுவதும், தேவை; கடமை; வரவேற்கத்தக்கநிலைமை என்ற கருத்துடையவன், நான் என்பதை அறிவாய்.

அக்கறையற்று, ஆர்வமற்று கடமை உணர்ச்சியற்று, எப்படியோ ஆகட்டும், எவரோ அரசாளட்டும் என்ற போக்கு கொள்வது ஜனநாயகமாகாது; பொறுப்புணர்ச்சியுமாகாது. ஆகவே நாடெங்கும் மிகுந்துள்ள தேர்தல் ஆர்வத்தை நான் வரவேற்கிறேன்.

மலர்க்குவியலுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டே, மணம் தரும் இனிமையை உணராதிருப்பதுபோல, மழலை கேட்டும் புன்னகை காட்டிடாது இருப்பதுபோல, இசைக் கூடத்திலே அமர்ந்திருந்தும், இடித்த புளியாகக் கிடப்பதுபோல, நாட்டு அரசியல் வாழ்வை உருவாக்கக்கூடிய பொதுத்தேர்தலுக்கான சூழ்நிலை உருவாகும்போது, நமக்கென்ன என்ற முறையிலே இருந்திடுவது, இயல்பை அறிந்திடாதார், இனிமை நுகர்ந்திட முடியாதாரின் போக்குக்கு ஒப்பானதாகும். அத்தகையோரின் தொகை குறைந்துவிட்டது. பொதுத்தேர்தல் என்பது நாம் மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு என்ற கடமை உணர்ச்சி மிகுந்திருக்கக் காண்கிறேன்; வரவேற்கிறேன்.

பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஆர்வம் காட்டாதிருந்திடின், அது கட்டாயக் கலியாணம்போல, ஒப்புக்கு உண்ட விருந்துபோல, சுவையற்றதாகிப்போகும். தமிழகத்தில், எந்த துறையிலும் அந்த நிலை இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலும் அளவிலும், பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் ஆர்வம் காட்டுகின்றனர்; தம்மை



ஜனநாயகத்துக்குத் தகுதி உள்ளவர்கள் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகின்றனர், மகிழ்ச்சி.

அரசியல் ஆர்வம் குன்றிடும் நாளே ஜனநாயக முறை அழிந்திடும் நாளாகும் என்று ஆங்கில அறிஞரொருவன் சொன்னது முற்றிலும் உண்மை. இரும்புப் பிடியிலே நாட்டை வைத்துக் கொண்டுள்ள முடிமன்னன் நாட்களிலும், 'கப்சிப்' தர்பார் நடாத்தும் சர்வாதிகாரியின் நாட்களிலும், பொதுமக்களுக்கு அரசியலிலே அக்கறை ஏற்படாது, ஆர்வம் எழாது; மாறாக சலிப்பும் சங்கடமும், அருவெறுப்பும் அச்சமும் எழும். யார் ஆண்டால் நமக்கென்ன? எப்படி ஆளவேண்டும் என்று கூறிட நாம் யார்? நாம் கூறினலா கேட்கப் போகிருர்கள்? நல்லதைச் சொல்லப்போய் பொல்லாங்கு தேடிக் கொள்வானேன். எதையாவது பேசித் தொலைத்து எவனுடைய பகையாவது மூண்டுவிட்டால் நம் பாடல்லவா ஆபத்து! நினைத்து நினைத்து மனம் குமுறலாமே தவிர பேசி வம்பிலே சிக்கிக் கொள்ளலாகுமா!—என்ற இந்தவிதமான பேச்சுகள் உலவிடும் நாடு, ஜனநாயகத்துக்கு ஏற்ற நாடு அல்ல.

குருடன் எதிரே வைரக் கற்களைக் கொட்டி வைப்பது போன்றதாகும், அக்கறையும் ஆர்வமுமற்ற மக்களிடம், ஆட்சி அமைத்திடும் அதிகாரச் சீட்டான ஓட்டுகளை அளித்து வைப்பது.

முறையாகத் தமிழ் கற்றிராதான் முன்பு நைடதத்தை நீட்டுவதற்குச் சமமாகும்.

கூந்தலற்றுள் கரத்தில் முல்லைச் செண்டு தருவது போன்றதாகும்.

வழுக்கைத் தலைப் பெரியவரிடம் வாசனைத் தைலம் தருவது போன்றதாகும்.

தமிழகம் அந்த நிலையில் இல்லை! அது குறித்து நாம் பெருமிதம் கொள்ளலாம்! ஜனநாயக உணர்வு நல்ல முறையிலே வளமாகி இருக்கிறது. இந்த நிலை எழ, தம்பி! நீ ஆற்றியுள்ள தொண்டு மகத்தானது. பாறைகளைப் பிளந்து கொண்டுவந்து குவித்து வைத்துள்ளாய்; இனி சிற்றுளி கொண்டு சிலை வடித்திட வேண்டும்! ஆடைக்கு ஏற்ற நேர்த்திமிகு நூலை குவித்துள்ளாய்; இனி வண்ணம் கூட்டி வகையாய் நெய்து அறுத்தெடுக்க வேண்டும். காலம் கனியும் நிலையை உண்டாக்கி வைத்துள்ளாய்; இனி சாறு பிழிந்தெடுத்து சத்துணவு ஆக்கிட வேண்டும்.

எடுப்பும் தொடுப்பும் மிடுக்குடன் அமைத்துவிட்டாய், இனி ஏற்றதோர் முடிப்பு, உன் பண்ணுக்கு அமைதல் வேண்டும். மலர் பறித்து, குடலையில் சேர்த்துள்ளாய்; இனி மாலை தொடுத்திட வேண்டும்.

அதுவும் உன்னால் முடியும்.

உன்னைக் கொண்டுதான் அதனை முடித்திட முடியும்.

முடித்தளிக்க நீ இருக்கிருய் என்ற துணிவு தான், என்னை ஆதிக்கக்காரரின் அறைகூவலை ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கிறது.

முடித்துத் தருவதற்கேற்ற அறிவாற்றல் உன்னிடம் நிரம்ப உளது என்பதை

அத்தனைப் படைக்கலன்களைத் தேடுகிருர்கள், போர் முறைகளை மாற்றுகிருர்கள்,

கடுங்கோபத்தால் தாக்கப்படுகிருர்கள்.

உன் நோக்கம் அவர்களுக்குப் புரிந்து விட்டது.

உன் சொல் நாட்டு மக்கள் செவி புகுந்து மனதிலே பதிந்துவிட்டது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டு விட்டனர்.

நாட்டு மக்கள் உன் பக்கம் திரண்டு நிற்பதை அவர்கள் காணுகின்றனர்.

அடங்கிக் கிடந்தவர்கள் ஒடுங்கிட மறுக்கின்றனரே! கட்டளைக்குக் காத்துக் கிடந்தவர்கள் காரணம் கேட்கின்றனரே! சொல்வதை யெல்லாம் நம்பிக் கிடந்தவர்கள், பொருள் என்ன? பயன் என்ன என்று கேட்கத் தொடங்கி விட்டனரே!

அச்சம் கப்பிக்கொண்டிருந்த கண்கள் இன்று கேள்விக் குறிகளாகி விட்டனவே!

காலம் மாறிவிட்டதே! குட்டு வெளிப்பட்டுவிட்டதே! — என்றெல்லாம் எண்ணுகின்றனர் ஏகாதிபத்தியப் போக்கினர்; எரிச்சல் எழுகிறது; ஏதேதோ செயல்களின்மீது அவர்களின் மனம் பாய்கின்றது.

எந்த அளவுக்குக் காங்கிரஸ் எதேச்சாதிகாரிகள் தமது ஆதிக்கச் சுவையை இழந்திட மனமின்றிச் செல்லுகின்றனர், என்பதனைக் காணும்போது தம்பி! வியப்புமிகுந்திடுகிறது, வேதனையும் பிறக்கிறது. உள்ளதைப் பறித்திடுவேன் உருத்தெரியாமல் ஆக்கிவிடுவேன், என்ற உருட்டல் மிரட்டலாலும், கடன்பட்ட நீயா கட்சி பேசுகின்றாய்! என் நிலத்தில் உழுது கொண்டே எனக்கேவா எதிர்ப்பு காட்டுகின்றாய்! என் ஜாதிக்காரனாக இருந்துமா இடையூறு செய்கின்றாய்! குளம் அறியும், கொடுவாள் அறியும் என் கோபம் எவரெவரை என்னகதி ஆக்கிற்று என்று; இருந்தும் இட்ட கட்டளையை மீறுகின்றாய், புலிமீது இடறிவிழுகின்றாய்! உன் தாய்மாமன் நாய்போல் என் முன்னால் நத்திக்கிடக்கின்றான்! நேற்றுதான் உன் பெரியப்பன் வேற்றூர் ஓடி இருக்கின்றான் எனக்கு அஞ்சி! நீ, காட்டுகின்றாய் உன் எதிர்ப்பை, கடுகளவும் புத்தியின்றி, என்னை எதிர்த்தோர், எவர் பிழைத்தார்? எண்ணிப்பார்! எவனையும் பிடித்து ஏவி உன் ஆவி பறித்திடுவேன்! சட்டம் என்ன செய்யும்! சமூகமும் ஏது செய்யும்! பொன்னை உருக்கிடுவேன், உண்மையைக் கருக்கிடுவேன். போதுமான சான்று தேவை எனில் போய்க்கேள், கண்ணிழந்த காத்தானை, முப்பதே வயதிலே முதுமைக்கோலம் கொண்ட முத்தனை, நத்தத்து முனியனை; கரம் இழந்த கண்ணப்பன், காலொடிந்த காட்டேரி — இவர்களெல்லாம் கதை கதையாய்க் கூறிடுவார்; கேட்டுத் தெளிவு பெறு!— என்றெல்லாம் பேசிப் பணியவைத்திட முனைகின்றார்; வெற்றியும் காண்கின்றார். அம்மட்டோ!

கழகத்தின் சார்பிலே வேட்பாளராக தம்பியொருவன் நிற்பான் என்றறிந்து காங்கிரசின் பெருந் தலைவர் சிலர் கூடி, அவன் அண்ணனையே வேட்பாளர் ஆக்கி மிரட்டுகின்றார்; குடும்பத்துக்குள்ளே குழப்பம் மூட்டியேனும் பதவிப்

பசி போக்க இரைதேடி அலைகின்றார். இத்தகைய சூழ்நிலையில், ஊர்மக்கள் உணர்ச்சி பெற்று, உண்மைக்குப் பரிந்துரைத்து, உறுதியுடன் பணியாற்றிடாது இருப்பரேல், என்னாகும்? ஜனநாயகம் மடிந்துபோகும். உரிமை உணர்வு அழிந்தொழியும்! உண்டு உறங்கிடு! உன் போன்றிருந்திட குழந்தைகளைப் பெற்றுத் தந்திடு! உரிமை உணர்ச்சி என்றோ, உலகப்போக்கென்றோ உற்றதுயர் போக்கிட வழியாது கூறிடுக என்றோ, பேசிடாதே என்று கூறி, கருத்துக்கு விலங்கிடும் கயமை நிறைந்த சர்வாதிகார முறை தலையெடுக்கும்; பிறகோ தலைநிமிர்ந்து நடந்திடவும் தடை பிறக்கும்; மாக்கள் மக்கள் என்பதற்கான வேறுபாடு காட்டிட உள்ள 'சிந்தனை சக்தி' செத்தொழியும்; வாயுண்டு வயிறுண்டு என்ற நிலை நிலைக்கும்; மக்கள் மாக்களாவர்!

ஆகவே தம்பி! வர இருக்கும் பொதுத் தேர்தல் எழுப்பிடும் கேள்வி, எவர் அமைச்சர் என்பதல்ல, நாடு பெறப்போவது எதனை?

சர்வாதிகாரமா?

ஜனநாயகமா!

இஃதே கேள்வி! இதுவேபிரச்சினை! இதற்கே பொதுத் தேர்தல். இதனை நன்கு உணர்ந்திருப்பதாலேதான், இந்நாட்டு மக்கள் இன்று இத்தனை ஆர்வம் காட்டுகின்றார், பொதுத் தேர்தல் குறித்து.

எங்கு திரும்பிடினும் இதே பேச்சு! அங்காடியாயிடினும் ஆலயமுற்றமெனினும், பூங்காவிலும் விழாக் கூடந்தனிலும், அலுவலகந்தன்னிலும் ஆற்றோர மணற்பரப்பிலும், எங்கும் இதே பேச்சு. இம்முறை கழகம் வெற்றிமிகப் பெற்றிடுமாமே! ஆட்சி அமைத்திடுமாமே! இயலுமா!—என்று கேட்பார் ஒருவர்; மக்கள் திரள்திரளாய்க் கூடுவதனையும் பேச்சாளர் தந்திடும் விளக்கந்தனையும் கணக்கெடுத்துப் பார்க்கும்போது, 'ஆம்' என்று கூறிடவே தோன்றுகிறது என்று விடை அளிப்பார் மற்றொருவர்; இன்னொருவர் ஏழெட்டு இலட்சத்தை எடுத்து அடித்தால் எளியோர்கள் வாய்பிளந்து, எல்லாம் மறந்துபோய் ஓட்டளித்துவிடுவராமே; எதிர்வீட்டு எல்லப்பன் கதர்க்கடையின் கணக்காளன்; எவரெவரோ தலைவர்கள் கூடிப் பேசினராம், கூறுகின்றான் திட்டத்தை என்று செப்புகின்றார்; காளை ஒருவன் கொதித்தெழுந்து கூறுகின்றான், 'இலட்சம் பல வரட்டும், இளித்துக் கிடந்திடப்போவதில்லை ஏழையரும்; இடுப்பொடிக்கத் துணிந்துவிட்டார் இறுமாப்பு மிக்கதோர் ஆட்சியினை: இதற்கான சான்று என்னிடம் பலஉண்டு என்று முழக்குகின்றான்.

இந்தத் தொகுதிக்கு இவர் முடிசூடா மன்னனாம்! இருமூன்று தலைமுறையாய் இந்தக் குடும்பமே கோலோச்சி வருகிறதாம்! இவராகச் சொல்லவில்லை இழுத்துச் சென்று, இம்முறை முடி உமக்கே, பிடியும் எழுதுகோலை, இங்கே ஓர் கையொப்பம், இனி மற்றக் காரியம் எம்மிடம் விட்டுவிடும்: வெற்றி உமக்குத்தான்; வேறோர் விஷயம் கூறுகின்றோம், வெளியே கூறிடாதீர்; மந்திரி வேலையொன்று உமக்கென்று உண்டு! போமய்யா போர்! அணைக்க வருகின்றாள் 'அதிர்ஷ்டம்' எனும் மங்கை! யோகமல்ன் உமக்கு அதுபோல் அமைந்துள்ளது என்று கூறி, உல்லாசபுரி வாழும் செல்வப்பிரபு இவரை, 'தலைவர்' கொண்டு வந்து தந்துவிட்டார் — என்றெல்லாம் பேச்சு, ஆளுங்கட்சியினர் கூடிடும் இடந்தன்னில்.

மாளிகையிலா உள்ளார் நம் தோழர்? இல்லை! அவர் இல்லம், சிறிய வீடு, கூறை, கொட்டகை; நடைபாதையுங்கூடத்தான்; நமதுநிலை நாட்டாட்சி உள்ளவிதம் காட்டிடுவது; அறிவாய்.

விந்தை என்னவெனில் தம்பி! அந்தத் தோழர், விழிப்புடன் உள்ளார்; எழுச்சி பெற்றுள்ளார்; பணம் படைத்த சீமான் முன் பணிந்திருக்கும் காலம் அல்ல இது; பணம்அங்குகுவிந்தவிதம் அறிந்துள்ளோம்: எமது உழைப்பன்றோ இவரை ஆக்கிற்று சீமானாய்; ஓட்டப்பராய் நாங்கள் இருந்திடச் செய்தவரே இந்த உயரப்பர், அறிவோமே; இவர்போன்றார் இருப்பைப் பெருக்கிக்கொள்ளத் தேடுகின்றார் ஆட்சி, பதவி: இவர்க்கா ஓட்டளிப்போம்! இவர்க்கு ஓட்டளித்து இழிநிலையைத் தேடிப்பெற, நாங்களென்ன அறிவை இழந்தவரோ! இல்லை! இல்லை! உள்ள செல்வம் அறிவு ஒன்றேதான்! அதனை இழந்திடவா துணிந்திடுவோம். அறிவையும் இழந்திடின் என்னாகும்? அவர் கால் தனக்கு நாங்கள் தூசு ஆவோம்! மானம் அழித்திடுவார், மாக்களாக்கிடுவார்! விவரம் புரிந்து கொண்டோம்: விளக்கம் பெற்றுவிட்டோம்; நாங்கள் வீழ்ந்து அழிவதற்கு நாங்களா ஆழ் குழியை வெட்டிடுவோம்! இல்லை! இல்லை! ஓட்டு என்ற ஒன்றன்றோ ஆணவக் கோட்டையைத் தகர்த்திட நாங்கள் பெற்றுள்ள வேட்டு!—என்றெல்லாம் பேசுகின்றார்.

அவர் விழி பேசும் மொழி அறியும் பயிற்சியினால் கூறுகின்றேன்.

கழகத் தோழர்கள் நன்கு அறிந்துள்ளார் கனதனவான்களெல்லாம் காங்கிரசில் உள்ளார் என்பதனை. இரும்புச் சீமானும் கரும்புக் கனவானும், பட்டம் சில பெற்ற பட்டணத்துப் பிரபுவெல்லாம் கொட்டம் அடிகின்றார் காங்கிரசைக் கொலு மண்டபமாகக் கொண்டு என்பதனை அறிந்துள்ளார். எனினும் பார் தம்பி! அவர்க்குள்ள ஜனநாயக உணர்வை!

எதிர்த்து நின்றிட இயலுமா என்று கேட்கின்றேன்; என் கடமையன்றோ! என்கின்றார்.

ஊரில் பெரியவராம் உள்ள செல்வம் குன்றனவாம், அவர்க்கு எதிராக நின்றிட அச்சம் எழவில்லையோ என்று கேட்கின்றேன், பாமர மக்கள் பாராளும் காலம் அண்ணா! என்ன வேடிக்கை இது, சொன்னது நீ அண்ணா! உனக்கே நான் கூறிடவா? என்று கேட்கின்றான் ஓர் தம்பி! சிரிப்பை அடக்கிக்கொள்ள வெகு பாடுபடுகின்றேன்.

வேண்டுமென்றே எவரேனும் மும்முனைப் போட்டிதனை மூட்டிவிடின் என் செய்வாய் என்கின்றேன்; நாமாகச் சென்று வீணுக்கு மும்முனைப் போட்டியினை மூட்

டிடலாகாது; ஆயின் அண்ணா! அச்சம் ஊட்டுதற்கும், அலைச்சல் உண்டாக்குதற்கும் மும்முனைப்போட்டியினை எவரேனும் மூட்டிவிட்டால், அது கண்டு மூலைக்குச் சென்றிடவா! இல்லை அண்ணா' களம் நிற்பேன் என்கின்றான் ஓர் காளை; கடமை அறிந்துள்ளான்.

ஆய்வுக் குழுவினராம் அருமைத் தம்பியர் நாடெங்கும் கண்டறிந்த 'சேதிகளை' இரவெல்லாம் கூறினர், கேட்டு இன்புற்றேன்; இருநூற்றுச்சொச்சம்தொகுதிகளிலும் நாம் வேட்பாளர் பெற்றிடலாம், உண்டு அதற்கான உறுதி; ஓட்டுகள் மொத்தத்தில் எந்த அளவு பெற்றிடலாம் என்ற கணக்கு மட்டும்போதும் என்பது நம் திட்டமெனின் எங்கும் நின்றிடலாம், எங்கும் உளர் நம் தோழர், எதிர்ப்புக்கு அஞ்சாதார்; விளைவு பற்றிக் கவலை கொள்ளாதார் என்கின்றார். ஓட்டுகள் மொத்தமாகப் பெற்றிடுவது மட்டுமல்ல நம் திட்டம், மற்றக் கட்சியினருடன் கலந்து உரையாடி, கணக்கெடுத்து காங்கிரசாட்சியினை வீழ்த்துதற்கு ஏற்றமுறையான தொகுதிஉடன்பாடு காணவேண்டும் என்பதற்கே இன்னின்ன தொகுதிகளை இன்னின்ன கட்சிகட்கு என்று குறித்திட இசைகின்றோம், என்கின்றார்.

ஆய்வுக் குழுவினர் அளித்த விவரம் விளக்கம், அவர் காட்டும் வாதத் திறமை, தம்பி! இரவெல்லாம் நான் கேட்டு இனிய விருந்துண்டேன். ஒன்றை விடவில்லை, ஒப்புக்குக் கூறவில்லை, உண்மை கண்டறிய திறம் காட்டி உழைத்துள்ளார்; நன்றி அவர்கட்கு; பெருமகிழ்ச்சி பெற்றுள்ளேன்.

ஒன்றில் மட்டுமே அவர்கள் உறுதி மிகுந்திருக்கக் காண்கின்றேன். ஒருதொகுதி தருவது மற்றவர்க்கு என்றாலும் எளிதில் இசைய மறுக்கின்றார்; நானே மறுக்கொணாத காரணம் காட்டுகின்றார்; இறுதியில், தோழமைத் தொடர்பு பெற, தொகுதி உடன்பாடு பெற இது தேவை என்பதனை வலியுறுத்தும் போது ஆமண்ணா' என்கின்றார். அப்பப்பா! அவர்களிடம் என் கருத்தைப் புகுத்திடுதல் எளிதல்ல! ஆயினும் தம்பி! அவர்களன்றோ இயக்கத்து அச்சாணி! அவர் பொறுப்பும் அருந் திறனும், ஓயா உழைப்புமன்றோ நமக்கோர் கழகத்தை—இல்லை தம்பி!—நாட்டுக்கோர் கழகத்தைத் தந்துளது. ஆகவே அவர் சொல்லை நான் கேட்குங் காலை தனிச் சுவையே காண்கின்றேன். எவர்க்கும் கிட்டா ஆற்றல் மிக்கோரைப் பெற்றுள்ளேன் என்பதனால் இணையற்ற பெருமிதமும் கொள்கின்றேன்.

இத்தனை விழிப்புடனே, பொறுப்புடனே பணியாற்றி கட்சி பலவற்றுடனும் கலந்து பேசி, கட்டத்திற்குக் கட்டம் என் கருத்தைக் கேட்டுப் பெற்று கட்சி பலவற்றுடனே கண்டுள்ளார், கனிவு மிகு தொகுதி உடன்பாடு; அதனை நான் ஏற்றுக்கொண்டுள்ளேன், மாவட்டச் செயலாளர், மற்றுமுள்ள கழகத்துக் காவலர்கள் ஒப்பம் பெற்று, எனினும் முழுமகிழ்ச்சி பெறமாட்டாய்; ஏனண்ணா! இந்தத் தொகுதியைக் கொடுத்திட்டீர்! என்ன கோபம் எங்களிடம்! உழைத்து வெற்றிதனை உருவாக்கி இருப்போமே! உடைத்துப் போட்டீரே எமது விருப்பமதை என்றெல்லாம் கூறிடும் தம்பியர்கள் கண்ணெதிரே தெரிகின்றார். அவர் விடுத்த மடல் பலவும், இதோ என் அருகில்! ஆயினும் தம்பி! தொகுதி உடன்பாடு எனில், சிலதொகுதி நாம் கொடுத்திடுவது, சில நாம் பெறுவது என்பதன்றோ பொருள்! எல்லாத் தொகுதியும் நமக்கே என்பதா! அறிவாயன்றோ. எந்தத் தொகுதியினை இழப்பதெனினும் அந்தத் தொகுதியினர் இழந்திட மனம் ஒப்பார்; வேறோர் தொகுதியினைக்காட்டிடுவார்; இது இயற்கை. அம்முறையில் வருத்தம் தெரிவித்தோர்க்கு, தான் கொண்ட வருத்தந்தனை அடக்கிக்கொண்டு மதுரை முத்து ஓர் விளக்கம் தந்திட்டார்;

வாதம் பல புரிந்தேன். வந்தது வரட்டும் போவது போகட்டும் என்று நான் இருந்திட்டேன். ஆயினும் நிலைமையை உணருகின்றேன். கட்சி பலவற்றுடனே தொகுதி உடன்பாடு காண்பதெனின் எளிதான காரியமா, இயலுமா உம்மாலே என்றெல்லாம் காங்கிரசின் தலைவர் இடித்திடித்துப் பேசி வந்ததனை அறிவாயே! இத்தொகுதி போய்விடுமே அந்தத் தொகுதி கிடைத்திடாதே என்பதெண்ணி தொகுதி உடன்பாடு காண முடியாமல், முறிந்துபோயின், என் சொல்வார்? ஏளனம், எங்கெங்கும் எழுமன்றோ! எங்கிருந்து வந்திடும் இவர்கட்கு உடன்பாடு காண்பதற்கான அறிவு, ஆற்றல், எமக்கு அப்போதே தெரியும், பேச்சு வெற்றி தராதென்று. அதற்கு ஏற்ற பக்குவம் தெரிந்தவரோ அண்ணாதுரை! பாவம், விவரம் அறியாதவன்; பேசுவான் ஏதேதோ! நாலு கட்சியினர் கூடிப்பேசி உடன்பாடு கண்டிட வைக்கும் ஆற்றல் ஏது அவனுக்கு! அவன் என்ன; கேரளத்து நம்பூதிரிபாதோ? அவர் வெற்றி கண்டார் உடன்பாடு திட்டத்தில். புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டுக்கொண்ட கதை போல, நானும் தொகுதி உடன்பாடு காண்பேன் என்று மேடையெல்லாம் கூறிவந்தான், மேதை இவன்! முடிந்ததோ இவனாலே. முறிந்ததே திட்டம்!! என்றெல்லாம், கேவலம் பேசுவர்; ஊர் சிரிக்க ஏதேதோ மூட்டுவர்; நம் அண்ணனையும் ஏசுவர்; ஆகவே கேரளத்து நம்பூதிரிபாத் பெற்ற உடன்பாடு வெற்றிபோல, நாமும் வெற்றி பெற்றிடும் ஆற்றல் உண்டு என்பதனை நாடு காண்பதற்கு நாம் பாடுபடக் கடமை உண்டு. அதற்கேற்ப உடன்பாடு திட்டம் காண முனைந்து நின்றோம். சில தொகுதி நமக்கு இல்லை என்றாலும், உடன்பாடு காண்பதிலே வெற்றி பெற்றோம்; இதிலே தோல்வி காண்போம் துளைத்தெடுத்துவிடலாம் என்று காங்கிரசுத்தலைவர்கள் போட்டிருந்த திட்டத்தை பொடிப் பொடியாய் ஆக்கிவிட்டோம்; ஆகவே அமைதிகொள்; அண்ணன் மேற்கொள்ளும் முயற்சி எலாம் நமது மாண்பினை உயர்த்திவிடும், நோக்கம் ஈடேறச் செய்திடும், வெற்றிக்கு வழி காட்டும், அறிந்து இருக்கின்றோமே இத்தனை ஆண்டுகளாய்; எடுத்துச் கூறத்தான் வேண்டுமா அந்த விவரமெலாம்

இதுபோலப் பேசினார் முத்து, குறைகண்ட தோழரிடம். என்னிடமோ ஏ! அப்பா! என்னென்ன விதமான கோபமெலாம் காட்டினர். எல்லாம் எதன் பொருட்டு? கழகத்தின் வலிவும் பொலிவும் மிகுந்திட!

**தம்பி! நாம் மேற்கொண்ட தொகுதி உடன்பாடு வெற்றியே தந்துளது.**

காங்கிரசை எதிர்த்து நிற்கும் பிற கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு கொள்ளவேண்டும் என்ற முயற்சி சென்ற பொதுத் தேர்தலின் போதே மேற்கொள்ளப்பட்டது. ஆனால் முடியாது போயிற்று. முஸ்லிம் லீக் மட்டுமே நம்முடன் தோழமைத் தொடர்பும் தொகுதி உடன்பாடும் செய்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது.

சென்ற பொதுத் தேர்தலின் போது தொகுதி உடன்பாட்டுக்காக, நம்முடன் கலந்து பேசிய கட்சிகள், லீக், சுதந்திரா, கம்யூனிஸ்டு கட்சி.

அப்போதே நம்முடன் கலந்து பேசுவதும், தோழமை கொள்வதும், தொகுதி உடன்பாடு செய்திடுவதும் கூடாது— கொள்கைக்கு ஒத்து வராது— தத்துவரீதியாகவேகூட அது தீது—என்ற கருத்துக் கொண்ட பகுதி கம்யூனிஸ்டு கட்சியிலே இருந்தது. மேடைகளிலேயும் பேசினர்; இதழ்களிலும் எழுதினர்; காரசாரமாக; கண்டிப்புடன். ஆயினும் தயக்கம் தடுமாற்றம் எனும் தடைகளை மீறிக்கொண்டு அவர்கள் கழகத்திடம் பேச இசைந்தனர்.

இதற்கிடையில் நாட்கள் வேகமாக உருண்டோடிக்கொண்டிருந்தன.

கழகத் தோழர்கள் கசப்புணர்ச்சி கொள்ளும் விதமாகவும், மனம் புண்படும் படியாகவும் கம்யூனிஸ்டு கட்சியினர் பேசியும் எழுதியும் வந்தனர்.

இதன் காரணமாகத்தொகுதிஉடன்பாடு பற்றிய பேச்சு துவக்கப்பட்டபோதே ஒரு கனிவு காணப்படவில்லை.

கட்சிகளாகட்டும், தனித்தனியானவர்களாகட்டும், தோழமை கொள்ளவேண்டுமென்றால், தொகுதி உடன்பாடுகொள்வதென்றால்,

**நட்புமுறை, ஒருவரை ஒருவர் மதித்திடுதல்.**

**ஒரு கனிவு; ஒரு இனிமை, சூழ்நிலையாக அமைந்திடவேண்டும்.**

**மிரட்டல் வற்புறுத்தல் வரட்டுவாதம்**

இவைகளின் பிடியிலே சிக்கிக்கொண்டால், தோழமைத் தொடர்பு ஏற்பட முடியாது.

**கழகத்தைப்பற்றிக் கேவலமாகப் பேசுவதுடன், உள்ளூர ஒரு வெறுப்புணர்ச்சியையும் வைத்துக்கொண்டு 'உடன்பாடு' காண்பதென்பது முடியாத காரியம்.**

**கூடாத காரியமுங்கூட.**

**ஒப்புக்கு ஒரு உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வது இடையிலே முறிவைத்தான் மூட்டிவிடும்.**

கழகத்துடன் கம்யூனிஸ்டு கட்சியினால் சென்ற தடவை உடன்பாடுகொள்ள முடியாமல் போய்விட்டதற்குக் காரணம், கழகத்திடம் நட்போ, மதிப்போ துளியும் அற்ற மனப்போக்கை கம்யூனிஸ்டு கட்சி வைத்துக்கொண்டிருந்ததுதான்.

லீகுடன் நேசத் தொடர்பு நீண்ட காலமாக இருந்து வருவதாலே, தொகுதிபற்றிய பேச்சு கனிவான ஒரு தொடர்பிலே ஒரு எடு என்ற விதமாக இருந்தது; உடன்பாடு ஏற்பட்டது.

**உள்ளன்பு முதலில்; உடன்பாடு பிறகு!! என்ற நிலை கண்டோம்.**

கம்யூனிஸ்டு கட்சியினரோ, உள்ளத்தில் கசப்பை வைத்துக்கொண்டே உதட்டளவு உறவுகாட்டிப் பேசினர். உடன்பாடு ஏற்படவில்லை.

சுதந்திரக்கட்சியின் நிலை இதுபோல இல்லை. தொகுதி உடன்பாடுபற்றிய பேச்சு எழுவதற்கு முன்பே, ஒரு தோழமைத் தொடர்பு அமைந்திருந்தது.

தொகுதிகள் பங்கிடுவதற்கான பட்டியல் இருகட்சிகளுக்கு மிடையில் உடன்பாடு காண்பதைத் தடுத்துவிட்டது.

என்றாலும், ஒரு கட்சியை மற்றோர் கட்சி மதித்ததாலும் ஒருகட்சிக்கும் மற்றோர் கட்சிக்கும் இடையில் நேசத்தொடர்பு அமைந்திருந்ததாலும், உடன்பாட்டுத் திட்டத்திலே ஒத்த கருத்து ஏற்பட முடியாதுபோயிற்று என்றாலும், காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்ற பொதுத் திட்டத்திலே கருத்து வேறுபாடு எழவில்லை. உடன்பாடு இல்லை என்று ஆகிவிட்ட பிறகும் ஒருகட்சியை மற்றோர் கட்சி மதிப்புடன் நடத்தமுடிந்தது. உள்ளன்பு மிகுந்திருந்தது.

தம்பி! இதனால்தான், பொதுத் தேர்தல் முடிந்த பிறகு சுதந்திரக் கட்சியும் கழகமும் பேதம், பகை ஏதுமற்ற நிலையில், உடன்பாடு கொள்ளவில்லை என்ற நினைப்புமற்று, பொதுக் காரியத்தில் ஒன்றுபட்டுப் பணியாற்றி வர முடிந்தது.

இந்த நல்ல சூழ்நிலை, இம்முறை உடன்பாடு பற்றிய பேச்சுக்குத் தேவைப்படும் கனிவினைத் தந்திருந்தது. ஆகவேதான் சுதந்திரக் கட்சியுடன் பொருத்தமான ஒரு தொகுதி உடன்பாடு செய்துகொள்ள முடிந்தது.

கம்யூனிஸ்டு கட்சி சென்ற தேர்தலிலே உடன்பாடு செய்துகொள்ளத் தவறிவிட்டது மட்டுமல்ல, பழையபடி கழகத் தோழர்கள் கசப்புணர்ச்சி கொள்ளும்விதமாகவும், மனம் புண்படும் விதமாகப் பேசவும் எழுதவும் தலைப்பட்டது. தொகுதி உடன்பாட்டுக்கான முயற்சி எடுத்துக்கொண்டபோது கழகம் ஒரு பொறுப்பான கட்சியாகத் தென்பட்டது. ஆனால் அதே கம்யூனிஸ்டு கட்சியின் கண்களுக்கு பிறகு கழகம்,

பிற்போக்குக் கட்சியாக

வகுப்புவாதக் கட்சியாக

அரை வேக்காட்டுப் பேர்வழிகளின் கட்சியாக,

மொழிவெறி கிளப்புவோரின் கட்சியாக

கொள்கையற்ற கட்சியாக,

திட்டமற்றகட்சியாகத் தெரியலாயிற்று.

தொடர்ந்து கம்யூனிஸ்டு கட்சி கழகத்தைக் கேவலப்படுத்தும் செயலைச் செய்து கொண்டு வந்ததுடன்,

காங்கிரசுக் கட்சியுடன் குலவவும், கூட்டு முயற்சிகளில் ஈடுபடவும் முனைந்திருந்தது.

தேசிய அணி — முற்போக்கு அணி— என்ற பல பெயரிட்டுக்கொண்டு, காங்கிரசுடன் உறவாடிக் கொண்டிருந்தது; கழகத்தைப் பல முனைகளிலும் எதிர்த்துக்கொண்டு வந்தது.

சில தொகுதிகளை விட்டுக் கொடுப்பதா வேண்டாமா என்ற விஷயமான கவலை ஏற்படுவதைவிட, எந்த ஒரு கட்சியிலும், அதிலும் அதற்காகத் தமது உயிரையும் கொடுக்கத் துணிந்து பணியாற்றி வருபவர்களுக்கு, மற்றோர் கட்சி பேசிக்கொண்டு வரும் கேவலத்தைத் தாங்கிக்கொள்வதுதான் அதிகக் கலக்கத்தைக் கொடுக்கும்.

நண்பரே! இந்த மூட்டை பளுவாக இருக்கிறது. தூக்கிப்போட ஒரு 'கை' கொடுத்து உதவும் என்று கேட்கும்போது, உதவி செய்திடத் தோன்றுகிறது. ஆனால், ஏ! பயலே! இந்த மூட்டையைத் தூக்கடா, பளுவு அதிகமாக இருக்கிறது என்று கூப்பிட்டால், மானமுள்ள எவனும் வரமாட்டானல்லவா!

எத்தனையோ தத்துவ ஏடுகளைப் படித்தவர்கள் என்கிறார்கள் கம்யூனிஸ்டுகளை. ஆனால் எனக்குத் தெரிந்த அளவில் அவர்கள் உளநூல் படிப்பதில்லை; ஏடுகளைக் கூட வைத்துக் கொண்டிருக்கக்கூடும்; ஆனால் மக்களை உளநூற்களாகக் கொள்வதில்லை.

இந்த நிலை காரணமாக, சுதந்திரக் கட்சியுடன் நேசத் தொடர்பு வளர்ந்துகொண்டுவந்த அதே காலத்தில், கழகத் தோழர்களுக்குக் கம்யூனிஸ்டு கட்சியுடன் கசப்பு அதிகமாகிக்கொண்டு வந்தது.

இந்த கசப்புணர்ச்சியை அதிக அளவிலும், மிக மும்முரமாகவும் வளர்த்துக்கொண்டும் வந்த முன்னணியினரே இன்றைய வலதுசாரி கம்யூனிஸ்டு கட்சியில் நிரம்பி இருக்கிறார்கள்.

இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சியினர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக கழகத்திடம் நெருங்கிய தொடர்புகொள்ளவும், நேசம் விரும்பவுமான நிலைமையை ஏற்படுத்திக்கொண்டனர். கழகத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஆய்ந்து பார்த்து இவைகள் முற்போக்கானவை என்பதை உணர்ந்தனர்; ஊருக்கும் எடுத்துரைத்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பிற்போக்குக் கட்சி என்று கூறுவது சரியல்ல, முறையல்ல என்று வெளிப்படையாகவே பேசலாயினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைமையைக் கணக்கில் எடுக்காமல், தமிழகத்து அரசியலைப் புரிந்துகொள்ள முடியாது என்ற முடிவுக்கு வந்தனர்.

யார் மேற்கொள்ளுகிற நடவடிக்கையானாலும், முற்போக்கு நடவடிக்கையென்றால், அதிலே பங்கு கொள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தயங்கியதில்லை என்பதனை அகமகிழ்ச்சியுடன் எடுத்துக் காட்டினர்.

சுருக்கமாகக் கூறுவதானால், தோழமைத் தொடர்புகொள்வதற்கும், தொகுதி உடன்பாடு கொள்வதற்கும், இடதுசாரி கம்யூனிஸ்டுகள் கழகத்திடம் வருவதற்கு முன்னாலேயே, அதற்குத் தேவைப்படும் பாதையை ஒழுங்காக அமைத்துக் கொண்டனர். அதனால், தொகுதி உடன்பாடு குறித்து கழகத்துடன் இடதுசாரி கம்யூனிஸ்டுகள் பேச்சு நடத்தியபோது, ஒருவரை ஒருவர் மதித்து நடந்துகொள்ளும் இரண்டு நண்பர்களுக்கிடையே நடந்திடும் உரையாடலாக அமைந்தது.

உண்டா? இல்லையா? அதிகம்! குறைவு! இந்த இடம், அந்த இடம்? இதற்கென்ன நியாயம், அது எப்படிப் பொருந்தும்? என்ற விதமான மோதல்கள் இருந்தன. என்றாலும் மகிழ்ச்சி தரத்தக்க சூழ்நிலை இருந்தது.

இந்தச் சூழ்நிலை காரணமாக கழகத்துக்கும் இடதுசாரி கம்யூனிஸ்டுகளுக்கும் தேர்தல் உடன்பாடு வெற்றியுடன் அமைந்துவிட்டிருக்கிறது.

இதற்கு நேர்மாறாக, வலது சாரிகள் நடந்து கொண்டு வந்தனர். சொல்லப் போனால் இந்த இரண்டு ஆண்டுகளாக வலது சாரி கம்யூனிஸ்டுகள் கழகத்தைக் கேவலப்படுத்திப் பேசுவதைத் தங்களின் நேர்த்தி மிக்க கலையாக்கிக் கொண்டனர். பற்பல ஆண்டுகள் முயன்றாலும் துடைக்கப்பட முடியாத அளவுக்குப் பகை உணர்ச்சியை மூட்டிவிட்ட வண்ணம் இருந்தனர்.

கழகத்தைக் கேவலப்படுத்துவதுடன் காங்கிரசுடன் குலவுவதையும் தங்கள் திட்டமாக்கிக் கொண்டனர்.

காங்கிரசுடன் சேர்ந்து கூட்டுக் கூட்டங்கள் நடத்துவதிலே மும்முரமாயினர்.

கழகத்தைத் தாக்கிப் பேசும் பகுதியையே காங்கிரஸ், இவர்களிடம் ஒப்படைத்துவிட்டது என்று நாடு கருதத் தக்க முறையிலே பேசி வந்தனர்.

காங்கிரசுடன் மட்டுமல்ல கழகத்தை எதிர்த்திட யார் புறப்பட்டாலும் உடனே 'அட்சதை' போட்டு 'ஆசீர்வதிக்கவும்', கைலாகு கொடுத்து வரவேற்கவும், கூட்டுச் சேர்ந்து கேவலம் பொழியவும் முனைந்தனர்.

இவ்வளவையும் தம்பி! நான் மறந்துவிட்டுத்தான் அவர்களை அழைத்தபடி, இருந்தேன், தேர்தலில் ஒன்றுபட்டுப் பணியாற்ற; காங்கிரசை வீழ்த்த, தொகுதி உடன்பாடு காண வாருக! என்று கேட்டுக் கொண்டேன். என் சொல் இவர்கள் செவி புகவில்லை என்பது மட்டுமல்ல, எங்களை யார் என்று அறியாமல், எமது தீவிரம் புரியாமல், பாரம் பரியத்தைத் தெரிந்து கொள்ளாமல், தங்களுடன் கூட்டுச் சேரும்படி அழைக்கிறார்களே திமு முனைக்கள், வேடிக்கையாக இருக்கிறதே!—என்று கேலி பேசினர்

தேர்தல் வரப்போகிறது ஓராண்டில் என்ற நிலை பிறந்ததும், எண்ணத்தை அல்ல—சொற்களைக் கூட அல்ல — குரலைச் சிறிது மாற்றிக்கொண்டு பேசலாயினர்; கூட்டுச் சேரவேண்டுமா? சேருவோம்! ஆனால் பிற்போக்குக் கட்சியான சுதந்திராவுடன் உள்ள உறவை அறுத்துக் கொள்! வகுப்பு வாதத்தை விட்டு விடு! பிறகு சேரலாம்!—என்று பேசலாயினர்.

குளித்துவிட்டு, தீட்டுப் போக்கிக்கொண்டு வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வை என்று வைதிகர்கள் கூறுவார்களே அந்தப் பாணியில்.

பொறுத்துக்கொண்டேன். சில இதழ்கள் கூட என்னைக் கேலி செய்தன. துளியாவது இந்த அண்ணாத்துரைக்கு ரோஷம் இருக்கிறதா! வலதுசாரிதான் கூட்டுச் சேர முடியாது என்று பேசுகிருன், உன்னைக் கண்டபடி ஏசுகிருன், வா! வா! என்று கூப்பிட்டபடி இருக்கிருனே. சே!—என்று எழுதின. பொறுத்துக்கொண்டேன்.

> **ஆனல் அப்போது விடாமல் நான் கூறிக்கொண்டுவந்தேன், கடைசியில், இந்த வலதுசாரிகளும் கழகத்தின் தோழமையை நாடி வரத்தான் போகிருர்கள் என்று.**

அதனையும் கேலி பேசினர் வலதுசாரிகள். ஆனல் அவர்களின் பிடிவாதத்தை அவர்களே மெள்ளமெள்ள கலைத்துக்கொள்ள வேண்டி நேரிட்டது.

> **உங்களுடனு! நாங்களா? என்ன துணிச்சல் எங்களை அழைக்க!**
>
> **உங்களுடனு? எங்களையா அழைக்கிறீர்கள்? எங்கள் பாரம்பரியம் தெரியுமா? வீரதீரம் தெரியுமா? தியாகத் தழும்பு தெரியுமா?**
>
> **எங்களையா! சுதந்திராவை பக்கத்தில் வைத்துக்கொண்டா?**
>
> **எங்களையா? சுதந்திராவுடன் உள்ள உறவைத் துண்டித்துக்கொள், அப்போது பார்க்கலாம்.**

இந்தவிதமான வீம்புடன், வழக்கமான தூற்றுதல் கழகத்தின்மீது.

அந்தச் சமயம் பொன்மலை சென்றிருந்த நான், பொதுக்கூட்டத்திலே கனிவுடன் அழைத்தேன் தோழமைத் தொடர்புகொள்ளும்படி. கணக்குக் காட்டியும் பேசினேன். அந்தப்பக்கத்து வலதுசாரித் தலைவரான கலியாணசுந்தரம் அவர்களேகூட தி.மு.க. ஒத்துழைப்பு இல்லாமல் இம்முறை வெற்றிபெற முடியாது என்று.

> சீறினுர்! சிம்ம கர்ஜனை எழுப்பினுர்! எனக்கா உன் ஒத்துழைப்பு? யாருக்கு வேண்டும்? யார் கேட்டார்கள். ஒருவருடைய ஒத்துழைப்பும் வேண்டாம், அதிலும் உன்னுடைய ஒத்துழைப்பைப் பெற்று நான ஜெயிக்க வேண்டும். அது தோல்வியைவிடக் கேவலம். உன்னுடைய ஒத்துழைப்பு இல்லாமல் நாற்பதாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் நான் ஜெயிப்பேன் என்று பேசி இதயக் கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

நம்ம முதலியார் இன்று அண்ணாத்துரையை வெளுத்துக்கட்டிவிட்டார் என்று கொண்டாடினுர்கள் வலதுசாரிகள்.

**எனக்கு உள்ளூரச் சிரிப்பு—இதே 'முதலியார்'தான் சென்ற தடவை தமிழ்நாடு முழுவதற்குமான உடன்பாடு பற்றிய பேச்சு முறிந்துபோன பிறகு, 'தன் வரையில்' மாவட்ட மட்டத்தில் கழகத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டவர்.**

**இவருடைய ராஜதந்திர முறையை மணலி, தஞ்சை வரையில் என்று கடைப்பிடித்திருப்பாரானல்; பாராளுமன்ற உறுப்பினர் ஆகி இருந்திருப்பார். மறுத்து நின்ருர். அதனலேயே எனக்கு அவரிடம் மதிப்புகூட வளர்ந்தது. தனக்கென்று ஒரு ஏற்பாடு செய்துகொள்ளும் நிலைமைக்கு அவர் தம்மைத் தாழ்த்திக்கொள்ளவில்லை.** மிகக் கடுமையாகக் கலியாணசுந்தரம் அவர்கள் பேசிய பிறகும் நான் சொல்லிக்கொண்டு வந்தேன்,

> பாருங்கள், வலதுசாரிகள் கழகத்தோடு உடன்பாடு தேடி வருகிருர்களா இல்லையா என்று.

நான் எதிர்பார்த்தபடியே வலதுசாரிகளின் போக்கிலே மாறுதல் ஏற்பட்டது. கூடிப்பேசினுர்களாம்! தத்துவவிளக்கம்—யதார்த்தநிலைமை அறிதல் போன்றவைகளின் மூலம், வெகு எளிதாக இடதுசாரிகள் முன்னதாகவே தெரிந்துகொண்ட 'காலகட்ட' கருத்தைக் கண்டுபிடித்து,

> சுதந்திராவுடனே வேறுயாருடனே தி. மு. க. உறவு வைத்துக்கொண்டிருந்தாலும் கவலையில்லை, பொருட்படுத்தவில்லை, ஆனல்,

---

# 'நம் நாடு'

## பெரிய அளவு

### விற்பனையாளர்களுக்கும் கழக நிர்வாகிகளுக்கும் வேண்டுகோள்

கழக ஏடான 'நம் நாடு' இதழை இப்போதிருக்கும் அளவிலிருந்து பெரிய அளவாக (டபுள் டெம்மி அளவு 10 காசு விலையில்) ஆக்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

'நம் நாடு' விற்பனையாளர்களும் மற்றும் கழக நிர்வாகிகளும் அதற்காக அளிக்கும் ஒத்துழைப்பு, உறுதுணை ஆகியவற்றை ஒட்டியே இந்த முயற்சி பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

எனவே, 'நம் நாடு விற்பனை செய்யும் தோழர்கள் பெரிய அளவு 'நம் நாடு' இதழை இப்போது விற்பனை செய்வதைவிட எத்தனைப் பிரதிகள் அதிகமாகக் கூட்டி விற்பனை செய்ய இயலும் என்பதை உடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கழக நிர்வாகிகள்-குறிப்பாக நகரக் கழகக் கிளைகளின் நிர்வாகிகள் பெரிய அளவு நம்நாடு இதழுக்கு எத்தனை சந்தாக்களைத் தங்கள் பொறுப்பில் சேர்த்துத் தர இயலும் என்பதைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனையாளர்களிடமிருந்தும், கழகத் தோழர்களிடமிருந்தும் கிடைக்கும் ஆர்வமான பதிலைக் கொண்டே, 'நம் நாடு' பெரிய அளவு ஆக்குவதற்கான முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்படும்.

**உடன் தெரிவியுங்கள்!**

**உள்ள அளவிலிருந்து பெரிய அளவிற்கு இதழைக் கொணர உதவிபுரியுங்கள்!**

அன்பன்,
**அண்ணாதுரை.**

தேர்தல் உடன்பாடு செய்வதானால் அது ஒரு குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் தான் அமையவேண்டும். அதற்குச் சம்மதம் தெரிவித்தால் பிறகு பேசலாம் என்றார்கள்.

நான் அதற்கும் இணங்கவில்லை. காரணம் ஆணவம் அல்ல. நான்விடுத்திடும் தோழமை அமைப்பு—எந்தக் கட்சிக்காக இருப்பினும்—கொள்கை அடிப்படையில் அல்ல; தொகுதி நிலைமை அடிப்படையில். ஆகவே இதற்கு அடிப்படைத் திட்டம் எதுவும் தேவை இல்லை என்பது என் எண்ணம்.

அந்தக் கருத்தையும் சிலமாதங்கள் கடுமையாகக் கண்டித்துவிட்டு, போகட்டும், இப்போது இல்லாவிட்டாலும், ஆட்சி அமைக்க நேரிடும்போது அந்த திட்டத்தை ஏற்றுக்கொள்வீர்களா? என்று கேட்டனர்.

அவர்கள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை.

ஏற்றுக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தவில்லை, பரிசீலனை செய்வீர்களா? பரிசீலனை கூட வேண்டாம், பேச்சின்போது அதன் அடிப்படையில் பேசுவோமா? சரி! அதுவும் முடியாதா? போகட்டும், அது எங்கள் திட்டம். நாங்கள் யார்மீதும் திணிக்க விரும்பவில்லை; பேசவரலாமா, தொகுதி உடன்பாடுபற்றி.

இந்தவிதம் வலதுசாரிகள், காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து பேசவரலாமா என்று கேட்டிருக்கிறார்கள். இருபத்தி ஓராம் தேதிக்குமேல் வரலாம என்று வலதுசாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு இடையில் இடதுசாரிகளுடன் பேசுகிறார்களாம்.

அந்தப் பேச்சு வெற்றிபெற வேண்டுமென விரும்புகிறேன்.

ஏனெனில் அந்தப் பேச்சு வெற்றி பெற்றிடின், வலதுசாரிகளுடன் கழகம் பேச்சு நடத்துவது மேலும் வசதியாக இருக்கும்.

அவர்களுக்குள்ளே பேச்சு வெற்றி பெறுவிட்டால், இடதுசாரிகளுடன் கழகம் செய்துகொண்ட உடன்பாட்டிலே குறிப்பிடப்பட்டுள்ள தொகுதிகளைத் தவிர மற்றத் தொகுதிகளைப்பற்றி மட்டுமே பேச முடியும். அதுதான் முறை. அதுதான் சாத்தியம்.

இதற்கிடையிலே தம்பி! கழகம் நடத்திய தோழமைத் தொடர்பும், தொகுதி உடன்பாட்டுப் பேச்சும்,

முஸ்லிம்லீக்

சுதந்திரக் கட்சி

பார்வார்டு பிளாக்

இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி

பிரஜா சோஷியலிஸ்டு கட்சி

ஆகிய கட்சிகளுடன் நமது கழகம் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள முடிந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேறு கட்சிகளுடனும் உடன்பாடு காண முயற்சி நடைபெறுகிறது.

ஒன்று நினைவிலே நாம் கொள்வது நல்லது: தேர்தல் உடன்பாடு பற்றி நாம் பேசத் தொடங்கிய போது, அடிப்படையாக

தி. மு. க.

முஸ்லிம் லீக்

சுதந்திரா

என்றுதான் துவங்கிற்று, இதனை முக்காலிக் கூட்டு என்று கூடக் கேலி பேசினர்; காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, வலது கூடத்தான்!

இந்த மூன்று கட்சிகளும் ஒன்று சேர முடியாது என்று காமராஜப் பெரியவர் மேடை தவறாமல் பேசிக்கொண்டு வந்தார், மட்டங்கள், மூன்று விரலைக்காட்டி—மூன்று கட்சிகள் — தெரிகிறதல்லவா பொருள் — மூன்று விரல்—நாமம்!—என்று நையாண்டி பேசின. இதைக் கேலிசெய்து விதவிதமான படங்கள். சித்திரக்காரர்களுக்கு நல்ல வருமானம். ஏகப்பட்ட ஆருடங்கள், இது நடக்காது என்று.

ஆனால் இப்போது முக்காலிக்கூட்டு என்றுகூட அவர்கள் கூறுவதற்கில்லை, ஏனென்றால், தொகுதி உடன்பாடு கையொப்பமாகி இருப்பது தி. மு. க. — லீக் — பார்வார்டுபிளாக் — சுதந்திரா — இடதுசாரி கம்யூனிஸ்டு கட்சி — பிரஜா சோஷியலிஸ்டுகட்சி— ஆகிய ஆறு கட்சிகளுக்கிடையில் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம்—தமிழர் இயக்கத் தலைவர் ஆதித்தன் அவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையும் தக்கபலன் தரத்தக்க முறையில் வடிவம் தந்திருக்கிறது. சம்யுக்த சோஷியலிஸ்டு கட்சித் தலைவர் நல்லசிவம் அவர்களுடன் நடந்த நட்புமிக்க பேச்சு, 'செங்காய்' என்ற வகையில் இருக்கிறது, உழைப்பாளர் கட்சித்தலைவர் S. S. இராமசாமி படையாச்சியாருடன், நான் ஒருமுறை பேசினேன்; ஆய்வுக்குழுவுடன் ஒருமுறை பேச்சு நடந்திருக்கிறது.

எனது மதிப்புமிக்க நண்பர் ம. பொ. சிவஞானம் அவர்களிடம் நடத்தப்பட்ட பேச்சுபற்றியும் குறிப்பிட வேண்டும். கழகம் தனது நிலைமையை அவரிடம் விளக்கிக் கூறியிருக்கிறது; விளைவு கனிவான நேசமாகவே இருந்திடும் என்று நம்புகிறேன்.

தம்பி! நான் செய்யக்கூடியவைகளைச் செய்துகொண்டு வருகிறேன்; முடிந்ததை. மூன்று கட்சிகளின் 'அணி' அமைக்க முயற்சி எடுத்துக்கொண்டோம், அரசியல் ஆருடக்காரர்களின் பேச்செல்லாம் பொய்த்துப் போகத்தக்க முறையில் இப்போது ஆறு கட்சிகளின் அணி என்று சொல்லத்தக்க, தொகுதி உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. இனி உன் வேலை தொடங்கட்டும்.

அண்ணன்,

அண்ணாதுரை



# பாண்டியன் திருமேனி

கே.ஜி. இராதா மணாளன்

## 2—29

## இதென்ன சண்டித்தனம்?

உருவிய வாளை உறையில் போட்டபடி 'இங்கே யார் உன்னை வரச் சொன்னது?' என்று பராக்கிரமபாகு பற்களை நறநறவெனக் கடித்தபடி திருமேனியின் பக்கம் திரும்பினான்.

"நான் என்னப்பா தப்புச் செய்தேன்? எதற்காக இப்படிக் காய்ந்துக்கொள்கிறீர்கள்?" என்று பயந்த குழந்தையைப் போலத் திருமேனி நடுங்கிக்கொண்டே கேட்டாள்.

"எவன் மீதோ கொண்ட கோபத்தை இவளிடம் காட்டிவிட்டேனே! என் கோபக் குரலைக் கேட்டுத் திருமேனி பயந்து நடுங்குகிறாள! குழந்தையின் தாமரை முகம் கூம்பிவிட்டதே! சே சே! என்ன மதிகெட்ட செயல்!' என்று பராக்கிரமபாகு தன்னைத் தானே நொந்துகொண்டான்.

குலசேகரனைச் சுட்டிக் காட்டி 'யார் அப்பா, இவர்?' என்று ஒன்றும் தெரியாதவளைப்போல திருமேனி கேட்டாள்.

"இவனா அம்மா? இவன்தான் குலசேகரன்—பாண்டிய மன்னன்—நமது பரம விரோதி!"

"அப்பா! உங்களுக்கு எப்பொழுது ஏற்பட்டது இந்த மூளைக் கோளாறு?" என்று மழலை பைத்தியக்காரியின் குரலில் அவள் பேசத் தொடங்கினாள்.

"திருமேனி நீ உள்ளே போம்மா!'

"நல்ல வேளையாகத் தடுத்தேன்—தடுத்திரா விட்டால்...'

"இந்தத் தறுதலையின் தலை இந்நேரம் தரையில் குதித்தாடிக் கொண்டிருக்கும்!"

'நல்ல வீரம் அப்பா உங்களது! நான் உங்கள் சங்கிலியைக் கட்டிப் பிடித்திருக்கிறீர்கள் இவரை! அப்படிக் கட்டுண்டு நிராயுதபாணியாக இருக்கும் இவரைப் பார்த்துக் கத்தியை வீச, கோழைகூட வெட்கப்படுவான்?"

"தந்தைக்கு அந்தக் கேவலப் பட்டம் வரக்கூடாதென்றுதான் தடுத்துவிட்டாயா? நல்ல காரியம் செய்தாய்! நான் இனிமேல அப்படிச் செய்யமாட்டேன்! உள்ளே நீ போ அம்மா. போ!' என்று அவள் அருகே சென்று பரிவோடு கூறினான்.

"நீங்கள் நினைப்பது, சொல்லுவது அவ்வளவும் சுத்த தப்பு! உங்களுக்குக் கோழைப் பட்டம் வரக்கூடாதே என்று நான் தடுக்கவில்லை! யாரைக் கொல்லவேண்டுமோ அவரைக் கோலாகலமாக வாழவிட்டுவிட்டு—யாரை மரியாதையோடு வரவேற்று மனங்குளிரப் பேசவேண்டுமோ அவரைக் கொன்றுபோட இருந்தீரே! நல்ல வேளை—நான் தடுத்திராவிட்டால்—நண்பர் ஒருவரைத் தாங்கள் இந்நேரம் இழந்துவிட்டிருப்பீர்களே!'

"நயவஞ்சகனான இவனா நமது நண்பன்?'

"இல்லை, இறுமாப்புப் பிடித்த சோழர்தான் நமது சொந்தக்காரரா?"

"உள்ளே போ நீ! சொன்னால் கேட்கமாட்டாய்—உள்ளே போ! பைத்தியக்காரத்தனமாய்ப் பேசி, என் கோபத்தைக் கிளறாதே!" என்று சிறிது கடுமையாகச் சொன்னான்.

"பைத்தியக்காரத்தனமான பேச்சா நான் பேசுவது? ஏனப்பா அவ்வளவு கேவலமாகச் சொல்லுகிறீர்கள்—மறைமுகமாகப் பைத்தியக்காரி என்று என்னைச் சொல்லிவிட்டீர்களே! எல்லோரும் எனக்குப் பைத்தியம், பைத்தியம் என்று சொல்லுகிறார்கள்! நீங்களும் மட்டும் ஏன் சொல்லாமல் இருக்கிறீர்கள்—சொல்லுங்கள் அப்பா!' என்று தந்தையைப் பார்த்துச் சொல்லிவிட்டு, குலசேகரனைப் பார்த்துப் பேசினாள்:

"பாண்டிய மன்னரே—பாருங்கள் என்னை! நன்றாகப் பாருங்கள்! கூறுங்கள். நான் பைத்தியக்காரியா? நானென்ன ஆடையைக் கிழித்துக் கொள்கிறேனா—ஆ ஊ என்று கத்துகிறேனா? பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறேனா—பெரியவர் சிறியவர் என்ற மரியாதை தெரியாமல் பேசுகிறேனா? தைய் தைய் என்று குதிக்கிறேனா—தெருவில் ஆடிப் பாடி புரளுகிறேனா? பிறர் பேச்சைக் கேட்டே பழகிவிட்டவர் அப்பா—நீங்களாவது உண்மையைச் சொல்லுங்கள். நான் பைத்தியக்காரியா?"

"பேராசைக்காரனின் மகள் பைத்தியக்காரியாக இல்லாமல், பரிமள வல்லியாகவா இருப்பாள்?' என்று குலசேகரன் அலட்சியத்தோடு சொல்லிவிட்டு, போலி ஆத்திரத்தோடு அவள் முகத்தைப் பார்த்தான்.

"போயிற்று அப்பா' போயிற்று என் மானம்! அவமானமான பேச்சு அப்பா, அவமானமான பேச்சு இது!" இவர் நம் நண்பரே அல்ல—விரோதிதான்! விவேகத்தோடு தான் அப்பா, நீங்கள் வீச இருந்தீர்கள் கத்தியை! மானபங்கம் செய்தவரை இலங்கை இளவரசி என்றைக்குமே மன்னித்தது கிடையாது! ஆமாம், கொடுங்கள் அப்பா அந்த வாளை—துடுக்குத்தனமாகப் பேசிய இவர் நாவைத் துண்டித்து விடுகிறேன்!" என்று சீற்றத்தோடு சொல்லிக்கொண்டே தந்தையின் தங்க உறையிலிருந்த வாளை எடுக்க அவள் ஓடினாள்.

பராக்கிரமபாகு ஆத்திரத்திற்கும் அவமானத்திற்கும் இடையே துடிதுடித்தான். மற்றவரின் எதிரில் மானக்கேடாக நடந்துகொள்ளும் மகளைக் கண்டிக்க வேண்டுமென்ற கோபம் ஒருபுறம்—கண்டித்தால் கண்ணீர் விடுவாளே என்ற சங்கடம் மற்றொருபுறம்—இலங்கை அரசனின் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

வாளைத் தொட்ட மகளின் கையைப் பிடித்துக்கொண்டு 'கண்ணல்ல, நீ உள்ளே போம்மா!' என்று இதயத்தில் குமுறிய ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு இன்மொழி புகன்றான்.

"வெறுங்கையோடு நான் உள்ளே போவதா? முடியாது அப்பா முடியாது! முரட்டுச் சொல் சொன்ன இவரது முண்டத்தை இங்கே போட்டுவிட்டு தலையை எடுத்துக் கொண்டுபோய் நான் விளையாடப் போகிறேன்!"

"தந்தை சொல்லை, மகள் தட்டக்கூடாது; உள்ளே போ!"

"மகள் கோபத்தைத் தந்தையும் தடுக்கக்கூடாது! கொடுங்கள் வாளை!"

"இவன் தலைதானே உனக்கு வேண்டும்!"

"ஆமாம்!"

"அந்தப்புரத்திற்கு நீ போ! தங்கத் தாம்பாளத்தில் இவன் தலையை நான் வைத்து அனுப்புகிறேன்!"

"போங்கள் அப்பா, பொய் சொல்லுகிறீர்கள்."

"இதென்ன சண்டித்தனம்? திருமேனி இப்படி எல்லாம் செய்தால் எனக்கு கோபம் வரும்!"

"இப்படி எல்லாம் நீங்கள் பேசினால் நான் அழுவேன்! ஆமாம்!"

பராக்கிரமபாகு அவளை முறைத்துப் பார்த்துவிட்டு 'வெண்ணிலா! வெண்ணிலா!' என்று உரத்த குரலில் அழைத்தான்.

திரையை விலக்கிக்கொண்டு வெண்ணிலா என்ற தோழி வெளியே வந்தாள்.

"வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் நிற்கிறாயா? எத்தனை முறை சொன்னாலும் உனக்குக் கொஞ்சங்கூட புத்தியே இல்லையே! இவளை இங்கே எல்லாம் ஏன் வரவிடுகிறாய்? என்று அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தை யெல்லாம் தோழியின் மீது கொட்டினான்.

"நானென்ன செய்வது அரசே—என் பேச்சைக் கேட்டால்தானே? வேண்டாம் அம்மா, அங்கேயெல்லாம் போகக்கூடாதென்று எவ்வளவோ தடுத்தேன்! தலையில் அடித்துத் தரையில் என்னை உருட்டிவிட்டு, இங்கே ஓடிவந்துவிட்டார்கள், இளவரசியார்!" என்று பயந்துகொண்டே வெண்ணிலா கூறினாள்.

"கேட்டீர்களா அப்பா இவள் பேச்சை—எவ்வளவு அழகாக இருக்கிறது? இவள் பேச்சை நான் கேட்கவேண்டுமாம்! யார் பேச்சை, யார் கேட்கவேண்டுமாம்? தோழியின் பேச்சை, இளவரசி கேட்கவேண்டுமாம்! தோப்புக் கரணமும் போடவேண்டுமாம்! அழகாக இல்லையா அப்பா—இவள் பேச்சு? என்னை ஏன் அப்பா பார்க்கிறீர்கள்—கண்டியுங்கள் இவளை. இனிமேல் இப்படியெல்லாம் பேசக்கூடாதென்று!"

"வெண்ணிலா, இனிமேல் இளவரசியிடம் நீ அப்படிப் பேசக்கூடாது! தெரிகிறதா, இல்லையானால் தண்டனை தருவேன்! சரி, திருமேனியை உள்ளே அழைத்துப்போ! என்று மன்னன் சொன்னதும், 'வா அம்மா, போகலாம்!' என்று தோழி இளவரசியின் கையைப்பிடித்து இழுத்தாள்.

"நான் போகட்டுமா அப்பா!"

"போம்மா!"

"தங்கத் தாம்பாளத்தில்..."

"இவன் தலையை வெட்டி அனுப்புகிறேன்!"

"வேண்டாம் அப்பா! பௌத்தர்களாகிய நாம் அப்படியெல்லாம் செய்தால், புத்தர் கோபித்துக் கொள்வார்! அதுமட்டுமல்ல அப்பா தலையில்லாத இவர் முண்டத்தை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்வது! இரண்டும் ஒன்றாக இருந்தால்தான் அழகு! தனித்தனியாகப் பிரித்துவிட்டால், பார்க்கவே பயமாக இருக்காதா? பயத்திற்காகக் கூட நாம் பயப்படவேண்டாம்—தலையை வெட்டினால் இரத்தம் வரும் அல்லவா?"

"ஆமாம்!"

"அந்த இரத்தம் பட்டால், இங்கே இருக்கும் இரத்தினக் கம்பளங்கள் எல்லாம் நாசமாகிவிடாதா? ஆகையால் இவர் தலையை நீங்கள் வெட்டக்கூடாது, அப்பா!"

"சரியம்மா!"

"சரி என்று சொன்னால் போதாது! சத்தியம் செய்து தரவேண்டும்!"

"வெண்ணிலா, இன்னமும் வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாயே—அழைத்துக்கொண்டு போ!" என்று மன்னன் சீறியதும், திருமேனியின் கையைப் பிடித்துத் தோழி வெளியே இழுத்துக்கொண்டு சென்றாள்.

பெருமூச்சு விட்டபடி பராக்கிரமபாகு ஆசனத்தில் போய் உட்கார்ந்தான். அவன் முகத்தில் வியர்வை அரும்பியது. குனிந்த தலையை நிமிர்த்தி, குலசேகரனைப் பார்க்கக்கூட அவன் விரும்பவில்லை.

திருமேனியின் திடீர் பிரவேசத்தால், அவன் மனம் மிகவும் குழம்பிவிட்டது. குலசேகரனை ஆத்திரங்கொண்ட மட்டும் பழித்துப்பேசி, முதலில் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவன் நினைத்திருந்தான். ஆனால் இப்பொழுது அதற்கேற்ற விதத்தில் அவன் மனநிலை சரியில்லை. எதிரியின் முன்னிலையில் மகள் கேவலமாக நடந்துகொண்டாளே என்ற வேதனைதான். அவன் உள்ளத்தில் தலைதூக்கி நின்றது.

அந்த வேதனையில், எதிரியை இழித்துப்பேச அவனுக்கு உக்கிரமும் உண்டாகவில்லை—உணர்ச்சியும் பிறக்கவில்லை. அந்த ஆசையை வேறொரு நாள் தீர்த்துக்கொள்ளலாம் என்ற முடிவோடு, 'இவனை இழுத்துச் சென்று, சிறையில் தள்ளுங்கள்!' என்று தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

வீரர்கள் பாண்டியனை இழுத்துச் சென்றதும், ஆசனத்தில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

"பைத்தியக்காரத்தனமான பேச்சா நான் பேசுவது? ஏனப்பா அவ்வளவு நீளமாகச் சொல்லுகிறீர்கள்—சுருக்கமாகப் பைத்தியக்காரி என்றுதான் சொல்லிவிடுங்களேன்! எல்லோரும் எனக்குப் பைத்தியம் பைத்தியம் என்று சொல்கிறார்கள்! நீங்கள் மட்டும் ஏன் சொல்லாமல் இருக்கிறீர்கள்—சொல்லிவிடுங்கள் அப்பா!" என்ற திருமேனியின் சோகம் நிறைந்த வார்த்தைகள், காதுகளில் வந்து ஒலித்து, அவன் கண்களைக் கலங்கச் செய்தன.

பராக்கிரமபாகுவின் செவியில் மட்டுமா—இல்லை—வஞ்சியிலுள்ள அரண்மனையில் கட்டிலின் மீது அமர்ந்திருந்த கனகசேனனின் காதுகளிலும் கூடத்தான் அந்தத் தேன்மொழியாளின் ஆவேசப் பேச்சு ரீங்காரம் செய்துகொண்டிருந்தது.

"என் பேச்சு புரியவேண்டுமென்ற அவசியமில்லை! ஆனால் என் செய்கை புரிகிறதல்லவா? திருமேனி யார் என்று தெரிந்துகொண்டீர் அல்லவா?"

"திரும்பவும் கேட்கிறேன், நான் யார் என்று தெரிந்துகொண்டீர் அல்லவா?"

"உம் மனத்தைக் குழப்பவில்லை—குழம்பியுள்ள மனத்தில் தெளிவை உண்டாக்கவே பேசுகிறேன்!

"மலர் பறிக்கவும், மணந்தவனின் கால்பிடிக்கவும், மட்டிலா மகிழ்ச்சிதரும் மகவைத் தொட்டிலில் போட்டாட்டவும் தெரிந்த அதே கரங்கள் மாற்றாரின் தலைகளை வெட்டிச் சாய்க்கவும் வல்லமை வாய்ந்தவை என்ற உண்மையை நிலைநாட்ட உறுதிகொண்டேன்? வளையல் அணிந்த கைகள் வாளேந்தும்—அன்ன நடைபோடும் அனிச்சமலர்ப்பாதங்கள், சினத்தில் ஒரு அடியெடுத்து வைத்தால் இந்த அண்டமே கிடுகிடுக்கும்—என்ற ஆற்றலை வெளிப்படுத்தும் பேரவாவினால் பாண்டிய நாட்டுப் போர்க்களத்தில் இரத்தச் சேற்றில் நான் நடந்தேன்! அப்படி நான் வாள்

சுற்றிய நேரத்தில், இரு கண்கள் என் இதயத்தினுள் புகுந்து சுற்ற ஆரம்பித்தன! பிணங்களின்மீது வீர தாண்டவமாடிய அஞ்சா நெஞ்சன் குலசேகரனைக் கண்டேன்; அவரது வீரம் என் மனத்தைக் கவர்ந்தது! அவரது அழகு முகம், என் இதயத்தில் அவருக்கென்று ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டது! இலங்கை திரும்பிய நான்—அப்பாவின் திட்டத்தை அறிந்தேன்! குலசேகரன் குடிபுகுந்த இதயத்தில், நானெப்படி உமக்கு இடமளிக்கமுடியும்?"

"குலசேகரன் குடிபுகுந்த இடத்தில், நானெப்படி உமக்கு இடமளிக்க முடியும்?

குன்றின் அடிவாரத்தில், திருமேனி உணர்ச்சி நிறைந்த குரலில் பேசிய பேச்சு, கனகசேனனின் நினைவில் வந்து எதிரொலி செய்தன.

இரு கைகளாலும் தலையைப் பிடித்துக்கொண்டான்—வேதனையையும் ஏமாற்றத்தையும் தாளமுடியாமல்!

"திருமேனி! திருமேனி!" என்று அவன் இதயத்தில் ஒரு ஈனக்குரல் மட்டும், ஈனத்தொனியில் புலம்பிக்கொண்டிருந்தது.

"நீங்களாவது உம்மனத்தை மாற்றிக்கொள்ளுங்கள் - மற்றொருவனின் காதலியை மணப்பது முறையல்ல என்ற தெளிவைப் பெறுங்கள்! தேம்பும் எனக்கு வாழ்வு அளியுங்கள்!"

கண்ணீர் கொட்ட தேம்பும் குரலில் திருமேனி வேண்டினாள்—அவன் மனத்திரையில்வந்து நின்று.

"வாழ்வு அளிப்பதா? யாருக்கு நான் வாழ்வு அளிப்பது?" என்று அவன் முணுமுணுத்தான்.

"வாழ்வு அளிப்பதா? உம்மாலா முடியும் அது? முடியாது? நீங்கள் பிறருக்கும் வாழ்வு அளிக்கமாட்டீர்! நீங்களும் வாழமாட்டீர்" என்று சொல்லிக்கொண்டே அஞ்சலை அந்த அறையினுள் வந்தாள்.

"அஞ்சலை! திரும்பவும் வந்துவிட்டாயா — என்னை வாட்டிவதைக்க!" என்று வெறுப்போடு சொல்லிவிட்டுக் கட்டிலைவிட்டெழுந்து திறந்த பலகணியின் அருகே சென்று வெளியில் பார்வையைச் செலுத்தினான்.

தோட்டத்தில் பூத்திருந்த மலர்கள் அவனைப் பார்த்துக் கேலிச் சிரிப்புச் சிரித்தன! வல்லூறைக் கண்டதும் பயந்தோடுவதைப் போல, அவனைக் கண்டு பறவைகள் மரங்களைவிட்டுப் பறந்தோடி மறைந்தன!

தோட்டத்தில் செலுத்திய பார்வையை மீட்டு, தரையில் செலுத்தினான்.

"குலசேகரன் குடிபுகுந்த இதயத்தில், நானெப்படி உமக்கு இடமளிக்க முடியும்!'



போர்க்களத்தில் திக்குத் திசை தெரியாமல் திகைத்துப் போய் நின்ற யானையின்மீது, வேல்களும் அம்புகளும் அணி அணியாய் வந்து பாய்வதைப்போல — திருமேனியின் இவ்வார்த்தைகள் அவன் இதயத்தில் அடுத்தடுத்து வந்து தைத்தன.

"உமது காதல் எதிரி குலசேகரனைத்தான் சிறையில் தள்ளிவிட்டீர்! இன்னமும் ஏன் முகவாட்டத்தோடு இருக்கிறீர்? ஆனந்தப்பட வேண்டிய நேரத்தில் — பாலையோ பறிகொடுத்துவிட்டவரைப்போல — ஏன் தள்ளாடுகிறீர், கைபிசைந்து கொள்கிறீர்?" என்று குறும்போடும் குத்தலோடும் அஞ்சலை கேட்டாள்.

"அஞ்சலை—நீ பேசாமல் இருக்க மாட்டாய்?" என்று சலிப்போடு கூறியபடி, அவள் எதிரில் வந்து, நின்று கைகளைக் கட்டிக்கொண்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

"என்னைக் கண்டால் சலிப்பு—திருமேனியை நினைத்தால் சஞ்சலம்! விந்தையான மனநிலையில் விழுந்துவிட்டிருக்கிறீர், இளவரசே!"

"இந்த அறையினுள் உன்னை யார் வரச்சொன்னது?"

"மனம் கட்டளையிட்டது—கால்கள் இங்கே கொண்டுவந்தன!"

"விளையாட இது நேரமல்ல!"

"இதைவிட அற்புதமான நேரம் என்னைப்போன்ற அபலைகளுக்கு வேறு கிடைக்காது இளவரசே!"

"உன்னோடு வீண்வம்பு எதற்கு நான் வெளியில் போகிறேன்!" என்று அவன் திரும்பினான்.

"நில்லுங்கள் என்னைப் பார்க்கவும் என்னோடு பேசவும் உமக்கு வெட்கமாக இருக்கிறதா? ஆண்களுக்கு வெட்கம்கூடாது அரசிளங்குமரரே! வீரம் இருக்கவேண்டும்! வீரத்தை மதிக்கும் பண்பு இருக்கவேண்டும்! தமிழ நிலத்தின் மானத்தைக் காக்கவேண்டிய சுயமரியாதை தெரிந்திருக்கவேண்டும்! அந்நிய நாட்டான் நம்மீது அன்பு பொழிகிறானே, அதிலென்ன சூட்சுமம் இருக்கிறதென்பதை அறிந்து கொள்வதற்கான விவேகம் இருக்கவேண்டும்!" என்று வெப்பத்தோடு அஞ்சலை வார்த்தைகளைக் கொட்டினாள்.

என்ன பேசுவதென்பது புரியாமல் அவன் மௌனமாக நின்றிருந்தான்.

"ஏன் சித்திரவதைக்குள்ளானவரைப்போல, வாடிய முகத்தோடு சிரம் தாழ்த்தி நிற்கிறீர்? குலசேகரன் சிறையில்! இனி அந்தக் குளிர்மதி முகத்தாள் தங்களுக்குத் தானே? சிரியுங்கள்! அந்தச் சிங்களச் சிங்காரியை எண்ணியெண்ணிச் சிரியுங்கள்!" என்று கோபத்தோடு அஞ்சலை சொல்லியதைக் கேட்டதும், கனகசேனன் உறையினின்றும் வாளை வேகமாக வெளியே இழுத்தான்!

(வளரும்)

சென்னையில் காமதேனு, ஸ்ரீமுருகன்



எஸ்.எஸ்.ஆர். பிக்சர்ஸ் அளிக்கும்

# மணிமகுடம்

கதை, வசனம் - கலைஞர் மு. கருணாநிதி M.L.A.

ELEGANT

டைரக்ஷன்
எஸ்.எஸ்.ஆர். M.L.A.



BAKTHA

மற்றும் தென்னாடெங்கும் நடைபெறுகிறது.

சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.